Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 83 · சனிக்கிழமை Saturday · 24.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# தமிழ்நாடு இப்போது மாற்றத்திற்கு தயாராகிவிட்டது

## மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி பேச்சு



சென்னை,

சென்னை மதுராந்தகத்தில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணிபொதுக்கூட்டத்தில் நிறைவாக பிரதமர் நரேந்திரமோடி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

தமிழக சகோதர, சகோதரிகளே வணக்கம். 2026-ம் ஆண்டில் தமிழகத்திற்கு எனது முதல் பயணம் இது. சில நாட்களுக்கு முன்பு தான் எம்.ஜி.ஆர்.பிறந்தநாளை நாம் கொண்டாடினோம். ஏரி காத்த ராமரின் திருவடிகளில் வணங்குகிறேன். அனைவரின் நலன், தமிழ்நாட்டின் நலனுக்காக வேண்டிக்கொள்கிறேன். இன்று நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள். நேதாஜியோடு தோள் சேர்த்து வீரர்கள் பலர் இந்திய சுதந்திரத்துக்காக போராடினார்கள். அவர்களுக்கு நான் தலைவணங்குகிறேன்.

இங்கே அலைகடல் என மக்கள் வெள்ளம் திரண்டுள்ளது. இது ஒட்டுமொத்த தமிழகத்திற்கு சேதியை அளிக்கிறது. தமிழ்நாடு இப்போது மாற்றத்திற்கு தயாராகிவிட்டது. தி.மு.க.வின் மோசமான ஆட்சியில் இருந்து விடுபட துடிக்கிறது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசை விரும்புகிறது. மேடையில் உள்ள நண்பர்கள் ஒரே உறுதிப்பாட்டில் இங்கே கூடியுள்ளனர். அது தி.மு.க. ஆட்சியை தூக்கி எறிய வேண்டும் என்பதுதான். தமிழகத்தை ஊழலற்ற மாநிலமாக மாற்ற வேண்டும். திமுக ஆட்சியை அகற்ற கவுன்ட்டவுன் தொடங்கி விட்டது.

ஆட்சி கட்டிலில் தி.மு.க.வுக்கு 2 முறை வாய்ப்பு அளித்தீர்கள். ஆனால், தமிழக மக்களுக்குநம்பிக்கைதுரோகம் செய்துவிட்டனர். ஆற்றிய பணிகள் ஜீரோ. தி.மு.க. அரசு சி.எம்.சி. அரசு. அதாவது, கலைக்ஷன், மாபியா, ஊழல் அரசாங்கம் நடத்துகின்றனர். தி.மு.க.வை வேரடி மண்ணோடு கிள்ளி எறிய மக்கள் தீர்மானம் செய்துவிட்டனர். தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைப்பது உறுதியாகிவிட்டது. தமிழ்நாட்டில் இன்று எப்படிபட்ட அரசாங்கம் இருக்கிறது தெரியுமா. ஜனநாயகம் இல்லை. நம்பகத்தன்மை இல்லை. ஒரே குடும்பத்துக்காக இயங்குகிறது. 4 பாதை உள்ளது. வம்சாவளி பாதை, ஊழல் பாதை, பெண்களை வசைபாடுவது, கலாசாரத்தை வசைபாடுவது ஆகும். தி.மு.க.வின் ஊழல் பணம் யாருக்கு செல்கிறது என்பது சிறு குழந்தைக்கு கூட தெரியும்.

தமிழ்நாடு எப்படிபட்ட பூமி என்றால், பாரத நாட்டை வளம் நிறைந்ததாக மாற்றியது. கவுரவத்தை உயர்த்தியது. தி.மு.க.வின் கொடூரமான களைகளில் இருந்து தமிழ்நாட்டை விடுவிக்க வேண்டும். தமிழ்நாடு எந்த அளவுக்குமுன்னேறுகிறதோ, அந்த அளவுக்கு தேசமும் முன்னேறும்.

கடந்த 11 ஆண்டுகளில் பா.ஜ.க.அரசாங்கம் தமிழக வளர்ச்சிக்காக வரலாறு காணாத பணிகளை ஆற்றியுள்ளது. முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் குறைவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், 11 ஆண்டுகளில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ரூ.3 லட்சம் கோடியைதமிழகத்திற்கு வழங்கியுள்ளது. இது கடந்த அரசைவிட 3 மடங்கு அதிகம். ரூ.11 லட்சம் கோடிக்கான உதவிகளை அளித்துள்ளது. ரெயில்வே பட்ஜெட் பற்றிய எடுத்துக்காட்டு அளிக்கிறேன். அவர்கள் ரெயில்வே பட்ஜெட் மூலம் தமிழகத்திற்கு அளித்ததைவிட தேசிய ஜனநாயக கூட்டணி அரசு 8 மடங்கு அதிகம் வழங்கியுள்ளது. 80 ரெயில் நிலையங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய பலம் மீனவர்கள்தான். தேசத்தின் விவசாயம், மீன் வளத்துறையில் சாதனையை எட்டியுள்ளது. இவர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் மத்திய அரசு ஆதரவாக இருந்து வருகிறது. மத்திய அரசின் மூலம் இப்போது வரை தேசத்தின் விவசாயிகளுக்கு கிட்டத்தட்ட ரூ.4 லட்சம் கோடி வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மீனவர்களுக்கும் விவசாய கடன் அட்டை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உணவு பதப்படுத்தும் துறையில் அதிக வாய்ப்புகள் உள்ளன. அதை உலக சந்தைக்குகொண்டுசேர்க்க கடும்முயற்சியைபா.ஜ.க. அரசு செய்து வருகிறது.

தமிழக வளர்ச்சியில் இளைஞர்கள், பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தி.மு.க. அரசு இளைஞர்களை போதை குடும்பலிடம்ஒப்படைத்துவிட்டது. அவர்களை மீட்டெடுக்க வேண்டும். தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மக்களின் உடல் நலமே முக்கியம். தமிழகத்தை மாற்றிய மைக்கும். இன்று பாரதம் உலக முதலீட்டாளர்கள் விருப்பமாகிவருகிறது. பெரிய ஒப்பந்தங்களை பாரதம் ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டிற்கு இரட்டை என்ஜின் அரசாங்கம் தேவை. மத்திய அரசோடு இணைந்து பணியாற்றும் அரசாங்கம் இங்கு எப்போது வருகிறதோ, அப்போதுதான் முதலீட்டாளர்கள் இங்கு வருவார்கள்.

தமிழ்நாட்டில் குற்றங்களால் மோசமான பாதிப்பு பெண்களுக்குத்தான்ஏற்படுகிறது. ஜெயலலிதா குற்றங்களை தடுப்பதில் சிறப்பாக செயல்பட்டார். நான் பெண்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இங்கேதேசிய ஜனநாயக கூட்டணி அரசே அமைத்துதாருங்கள். உங்கள் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருக்கும்.

தமிழக இளைஞர்களை போதைப்பொருள் மாபியாவிடம் ஒப்படைத்துவிட்டது திமுக அரசு. தமிழ்நாட்டின் வளர்ச்சி பின்னோக்கி செல்ல ஆரம்பித்துள்ளது. திமுக ஆட்சியில் போதைப்பொருள் மாபியா கும்பல் செழிப்பாக உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் போதைப்பொருள் மாபியா ஒழிக்கப்படும். தமிழத்தில் 60 லட்சத்திற்கும் அதிகமான கழிப்பறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒரு கோடி குடும்பங்களுக்கு குழாய் வழி குடிநீர் வழங்கப்படுகிறது. பெண்களின் வசதிக்காக இது செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மொழி, தமிழ் கலாசாரம், வரலாற்று பங்களிப்பு எப்போதும் என்னுள் பாசத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றன. நான் காசி நாடாளுமன்ற உறுப்பினர். பனாரஸ் பல்கலைக்கழகத்தில் பாரதியார் இருக்கை அமைத்துள்ளோம். காசியில் பல பிள்ளைகள் தமிழில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தமிழ் கலாசாரம் பற்றி வெறும் வாய்ப்பந்தல் போடுபவர்கள் அல்ல. முருகப்பெருமானுக்கு விளக்கு போடுவது விவாதப் பொருளாக்கப்பட்டபோது, நமது தலைவர்கள் எல்லாம் பக்தர்களின் உரிமைகளுக்கு குரல் கொடுத்தார்கள். ஆனால், தி.மு.க.வும், கூட்டாளிகளும் வாக்கு வங்கிகளைகுஷிப்படுத்த நீதிமன்றங்களை கூட விட்டுவைக்கவில்லை, அவமானப்படுத்தினார்கள். தமிழ் கலாசாரத்தின் எதிரி தி.மு.க.

காங்கிரஸ்,திமுகவினர் ஜல்லிக்கட்டுக்கு தடைவிதித்து உங்கள் அனைவரையும் அவமானப்படுத்தினார்கள். பா.ஜ.க. அரசு சட்ட ரீதியில் ஆராய்ந்துதமிழகபாரம்பரியத்தை மீட்டுக்கொடுத்தது. அனைத்து வகையிலும் உங்களுக்கு துணை நிற்போம். தமிழகத்திற்கு திறமைகள் ஏராளம் உள்ளன. எப்படிபட்ட அரசாங்கம் தேவை. இளைஞர்கள் மீது நம்பிக்கை வைத்து, மத்திய அரசோடு இணைந்து செயல்படுவோம். வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்குவோம். ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்க திமுக - காங்கிரஸ் அரசு காரணம். சட்டசிக்கலை நீக்கி ஜல்லிக்கட்டு மீண்டும் நடைபெற காரணம் என்.டி.ஏ அரசு.

இவ்வாறு அவர் பேசினார்.

# “பா.ஜ.க. கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்” முதலமைச்சர் ஸ்டாலின் பதிலடி




செங்கல்பட்டு மாவட்டம் மதுராங்கத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பரப்புரை கூட்டம் (23.01.2026) நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி, அதிமுக பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசுகையில், "2026ஆம் ஆண்டில் நான் தமிழ்நாட்டிற்கு வருவது இதுவே முதல் முறை. பொங்கல் பண்டிகைக்குப்பிறகுதமிழகம்முழுவதும் வித்தியாசமான மகிழ்ச்சியில் இருக்கும் நேரம் இது. சில நாட்களுக்கு முன்பு, தமிழ்நாட்டின் வளர்ச்சி நாயகன் பாரத ரத்னா எம்.ஜி. ராமச்சந்திரனின் பிறந்தநாளும் கொண்டாடப்பட்டது.

இந்த மேடையில் இருந்து, உங்கள் அனைவருக்கும், தமிழ்நாட்டின் நலனுக்காகவும் நான் வாழ்த்துகிறேன். நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்தநாளும் இந்த நாளே. இந்த நாளை நாடு பராக்கிரமதிவாஸ்என்று கொண்டாடுகிறது. தமிழ்நாட்டின் பல துணிச்சலான சுதந்திரப் போராட்ட வீரர்கள் நேதாஜியுடன் சுதந்திரப் போரில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நபரின் இதயத்திலும் வீரமும் தேசபக்தியும் வேரூன்றியுள்ளன.

இந்தப் புனித பூமியிலிருந்து நேதாஜிக்கு எனது மரியாதையைச் செலுத்துகிறேன். இந்தப் பரந்த மக்கள் கடல் தமிழ்நாடு முழுவதும், நாடு முழுவதும் ஒரு வலுவான செய்தியை அனுப்புகிறது. தமிழ்நாடு இப்போது மாற்றத்திற்குத் தயாராக உள்ளதுஎன்பதேசெய்தி.

திமுகவின் தவறான நிர்வாகத்திலிருந்து தமிழகம் இப்போது விடுதலையை தேடுகிறது. தமிழகம் இப்போது பாஜகவின் தேசிய ஜனநாயக கூட்டணி அரசை விரும்புகிறது. திமுக அரசிடமிருந்து தமிழகத்தைவிடுவிக்கவேண்டும். தமிழ்நாட்டை வளர்ந்த, பாதுகாப்பான மற்றும் ஊழல் இல்லாத மாநிலமாக மாற்ற வேண்டும். திமுக அரசு வெளியேறுவதற்கான கவுண்ட்டவுன் ஏற்கனவே தொடங்கிவிட்டதை என்னால் தெளிவாகக் காண முடிகிறது. நீங்கள் (பொதுமக்கள்) திமுகவுக்கு இரண்டு முறை முழு பெரும்பான்மையை வழங்கினீர்கள். ஆனால் அவர்கள் தமிழக மக்களின் நம்பிக்கையை உடைத்துவிட்டார்கள். திமுக ஏராளமான வாக்குறுதிகளைஅளித்தது. ஆனால் அதற்காக எந்த வேலையும் செய்யவில்லை. மக்கள் இப்போது திமுக அரசாங்கத்தை சி.எம்.சி. அரசாங்கம் என்று அழைக்கிறார்கள். சி.எம்.சி. அரசாங்கம் என்பது 'ஊழல், மாஃபியா மற்றும் குற்றத்தை' ஊக்குவிக்கும் அரசாங்கம் என்பது பொருளாகும். தமிழக மக்கள் இப்போது திமுக மற்றும் சி.எம்.சி. (C: Corruption, M: Mafia, C: Crime) இரண்டையும் வேரோடு பிடுங்க முடிவு செய்துவிட்டனர். இங்கே, பாஜகவின் தேசிய ஜனநாயக கூட்டணி இரட்டை எஞ்சின் அரசாங்கம் ஆட்சிக்கு வருவது உறுதி" எனப் பேசினார்.

# அ.தி.மு.க. பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்; பிரதமர் மோடி முன்னிலையில் எடப்பாடி பழனிசாமி பேச்சு



சென்னை மதுராந்தகத்தில் நடைபெறும் தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:-

பிரதமர் மோடி இந்த மண்ணில் கால் வைத்ததும் இயற்கையே சூரியனை மறைத்துவிட்டது. சூரியன் மறைந்து குளிர்ச்சி நிலவுவதே சட்டமன்ற தேர்தலுக்கான வெற்றி சான்று. தேர்தலில் அதிமுக பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும். வரும் தேர்தலில் 210 இடங்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும்.

தேர்தலில் நமது வெற்றிக்கு மக்கள் துணை நிற்பார்கள்; கூட்டணி கட்சியினர் எழுச்சியோடு உள்ளனர். அதிமுக ஆட்சியில் கேட்ட திட்டங்களை வழங்கியது மத்திய அரசு.

தமிழகத்தில் கருணாநிதி குடும்பம் ஆட்சியில் அமர்ந்து கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறது. மக்களை வாட்டி வதைக்கும் ஆட்சி தேவையா? திமுகஆட்சி கொடுத்தது துன்பம், வேதனை, ஊழல்தான்; வரும் தேர்தல் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டும்; இதுதான் திமுகவுக்கு இறுதித் தேர்தல். உறவுக்கு கை கொடுப்போம்; உரிமைக்கு குரல் கொடுப்போம்.. பை.. பை.. ஸ்டாலின்.

இவ்வாறு அவர் கூறினார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ்

24.01.2026

# மானாமதுரையில் சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது



அகில இந்திய பார்வர்டு பிளாக் நிறுவனரும், இந்திய சுதந்திர போராட்ட வீரர்ருமான நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்தநாள் விழா நாடுமுழுவதும்கொண்டாடப்பட்டு வரும்நிலையில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தேவர் சிலையில் அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சிவகங்கை மாவட்ட தலைவர் பில்லத்தி கிருஷ்ணதேவர் தலைமையிலும், கலைமுதுமணி உலகத் தமிழ்ச்சங்க உறுப்பினர் பசும்பொன் அனந்தராமன், ஏ எம் அமவமுக நிறுவனர் அருண் பிரசாத் ஆகியோர் முன்னிலையில் சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்தநாள் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்திய பின்னர், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.

அதனை தொடர்ந்து பேசிய பில்லத்தி கிருஷ்ணதேவர், "சென்னை விமான நிலையத்திற்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பெயர் சூட்டவும், மதுரை விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்க தேவர் பெயர் சூட்டவும், நேதாஜியின் உண்மை வரலாறு ஆவணங்களை பொதுவெளியில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும்எனவும், நேதாஜியின் பிறந்தநாளை 'தேசிய தேசபக்தர் தினமாக' அறிவிக்க வேண்டும், மானாமதுரை சந்தக் கடை அருகில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுக்கு சிலை அமைக்கவும், சிகாகோவில் சொற்பொழிவில் பேசி முடித்த பின்பு விவேகானந்தர் அவர்கள் மானாமதுரையில் உரையாற்றிய இடமான சுந்தரபுரம் அக்ரஹாரம் வீதியில்அவருக்குமணிமண்டபம் அமைக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றிட சிவகங்கை மாவட்ட அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக பிரதமர் நரேந்திர மோடி அவர்களையும், மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தினார்".

இந்நிகழ்வில் நேதாஜி தொண்டர் செல்வராமன், 7வது வார்டு ராஜேந்திரன், தேவரின் பக்தர் சிவசாமி மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




SRMU பேரியக்கத்தின் தலைமையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எலக்ட்ரிகல் லோகோ ஷெட் (ELECTRIC LOCO SHED) ஈரோட்டில் கிளைத் தலைவர் திரு S.அண்ணாமலை தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சேலம் கோட்டச் செயலாளர் திரு N.பாஸ்கர் அவர்கள் சிறப்புரையாற்றினர். கிளைச் செயலாளர் P.விஜய் முன்னிலையில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில். Amrith bharath Loco பராமரிப்பை அதிகப்படியான ஆட்கள் உள்ள இடத்திற்கு மாற்றம் செய்ய வலியுறுத்தியும், ரயில்வேயில் தனியார் மையத்தை கைவிட வலியுறுத்தியும் வேலைக்கு ஏற்ப ஆட்கள் வழங்க வலியுறுத்தியும் கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது.

# உளுந்தூர்பேட்டை அருகே கொட்டையூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கி மின் ஊழியர் படுகாயம்



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கொட்டையூர் கிராமத்தில் மின்கம்பங்களை சரி செய்து கொண்டிருந்த மின் ஊழியர்சுந்தர்(24)என்பவர்மீது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியது இதில் படுகாயம் அடைந்த மின் ஊழியர் சுந்தரை சக ஊழியர்கள் மீட்டு உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர் அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது இந்த விபத்தை குறித்து எலவனசூர் கோட்டை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





25.01.2026 தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நேற்று [23.01.2026] ஈரோடு மாவட்டக் காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா தலைமையில் அலுவலக ஊழியர்கள் மற்றும் காவலர்களால் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டது.

# சாயர்புரத்தில் ஆபத்தை ஏற்படுத்தும் மின்கம்பத்தை மாற்றி அமைக்க வேண்டும்

## சாயர்புரம் பேரூராட்சி சேர்மன் கோரிக்கை




தூத்துக்குடி மாவட்டம் சாயர்புரம் மெயின் பஜாரில் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் மின்கம்பத்தை வேறு இடத்திற்குமாற்றிஅமைக்கவேண்டும்எனசாயர்புரம் பேரூராட்சி தலைவர் அ.பாக்கியலட்சுமி அறவாழி பொது

மக்கள்சார்பாகசம்பந்தப்பட்டதுறைக்குகோரிக்கை விடுத்துள்ளனர். அதன் விபரம் வருமாறு

சாயர்புரம் மெயின் பஜாரில் நாலு ரோடு சந்திப்பில் ஒரு மின் கம்பம் 50 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு கடை வியாபாரிகள் மற்றும் பொதுமக்களுக்கு மின் பகிர்மானம் அளித்து வருகிறது. சாயர்புரம் – ஏரல் சாயர்புரம்– வாகைக்குளம் இணைப்பு சாலை அருகே உள்ள மின்கம்பத்தை அகற்றி வேறு இடத்திற்கு மாற்றினால் மட்டுமே போக்குவரத்து சீராகும். மெயின்பஜார் வளைவு பகுதியில் இருசக்கர வாகனங்கள், பேருந்துகள், லாரிகள் மற்றும் கனரக வாகனங்கள் சென்று வரும் நிலையில் எதிரே ஒரு சிறிய வாகனங்கள் வந்தால் கூட போக்குவரத்துக்கு நெருக்கடி ஏற்பட்டு வருகிறது எனவே நீண்ட நேரம் போக்குவரத்து ஸ்தம்பிக்கும் நிலையில் உள்ளது. மேலும் விபத்துக்களும் அடிக்கடி ஏற்படுகிறது.

எனவே போர்க்கால அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிர்வாகம் தலையிட்டு மின்கம்பத்தை வேறு இடத்திற்கு மாற்றி அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.




கள்ளக்குறிச்சிமாவட்டம்உளுந்தூர்பேட்டையில்தேசியவாக்காளர்தினவிழிப்புணர்வு பேரணி நடைபெற்றது தேர்தல் துணை வட்டாட்சியர் புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இந்த பேரணியில் சுமார் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டியது அவசியம் குறித்து உறுதிமொழி எடுத்துக் கொண்டு பேரணியாக சென்றனர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து புறப்பட்ட பேரணி கடைவீதி, பேருந்து நிலையம், உழவர் சந்தை, சென்னை சாலை வழியாக வந்து மணிக்கூண்டு திடலை அடைத்தது

# மதுரை திருநகர் அருகே பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக நேதாஜி பிறந்தநாள் விழா



திருப்பரங்குன்றம் திருநகர் அருகேயுள்ள தெய்வீக திருமகன் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் நினைவு வளைவு இடத்தில் 130வது நேதாஜி பிறந்தநாளை கொண்ட திருநகர் காவல் நிலையத்தில் தெய்வீக திருமகன் தேவர் அறக்கட்டளை மற்றும் பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக நேற்று அனுமதி கேட்டு மனு அளித்தார்.

இதற்குதிருநகர்காவல் நிலை யத்தின் சார்பாக அனுமதி மறுக்கப்பட்டது.

இந்நிலையில் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சி சார்பில் நேற்றுசென்னை(மதுரை கிளை) உயர்நீதிமன்றத்தில் அவசர வழக்க எடுத்து அனுமதி வழங்கியது.

அதன் அடிப்படையில் தெய்வீகதிருமகன்தேவர் அறக்கட்டளை தலைவர் சசிக்குமார் செயலாளர் சரவணன் பெருளாளர் அழகு சுந்தரபாண்டி பார்வர்டு பிளாக் கட்சி மாவட்ட செயலளார் மோகன் திருப்பரங்குன்றம் ஒன்றிய செயலாளர் முத்துராஜா தொழிற் சங்க நிர்வாகி துரை சபின் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பொதுமக்களுக்கு அன்னதானத்தை வழங்கிய அறக்கட்டளை இணை செயலளார் கோபிநாத், மாமன்ற உறுப்பினர் சுவேதா சத்யன். மற்றும் அனைத்து கட்சி சார்பாகவும் அனைத்து சமுதாய மக்களுக்கள் திருநகர் மருது நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

# கஞ்சா வழக்குகளில் 5 குற்றவாளிகள் கைது

ஈரோடு மாவட்டத்தில் சட்ட விரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில், ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா நேரடி மேற்பார்வையில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 22.01.2026ம் தேதி அன்று ஈரோடு தெற்கு, கருங்கல்பாளையம், மொடக்குறிச்சி, ஈரோடு தாலூக்கா மற்றும் சித்தோடு காவல் நிலையங்களில் தீவிர கஞ்சா வேட்டை நடத்தப்பட்டு

1.ராஜசேகர்(23),த/பெ.சேதுராமன், குமரன் நகர் 5வது வீதி, ஈரோடு

2.விஜய்பாண்டி(26),த/பெ.கணேசன்,அருணாச்சலபுரம், முதல் வீதி, முனிசாலை ரோடு, மதுரை தற்போது காஸ்தூரிபாய் வீதி, சூரம்பட்டி, ஈரோடு

3. மோனிஸ்(19), த/பெ.ராஜன், எம்.ஜி.ஆர் நகர், சின்னியம்பாளையம், நஞ்சை ஊத்தூக்குளி, மொடக்குறிச்சி

4. ரியாஸ்(43), த/பெ.ஹனீபா, புதுக்காலனி, திண்டல், ஈரோடு

5. சந்தோஷ்(21), த/பெ.பாஸ்கரன், மாதேஸ்வரன் நகர், ஆர்.என்.புதூர், ஈரோடு

ஆகியோர் சட்டவிரோதமாக கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக பிடிக்கப்பட்டு அவர்கள் வசமிருந்து 6.160 கிலோ கிராம் கஞ்சா பறிமுதல் செய்து நிலையம் அழைத்து வந்து வழக்குபதிவுசெய்யப்பட்டுநீதிமன்றகாவலுக்குஅனுப்பி சிறையில் அடைக்கப்பட்டனர் என்பதை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெறும் பாரதிய ஜனதா கட்சியின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்துகொண்டார். இதனால் தென் மாவட்டங்களில் இருந்து சென்னை நோக்கி செல்லும் கனரக வாகனங்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே உள்ள மடப்பட்டு ஜிஎஸ்டி சாலையில் இருந்து திருவண்ணாமலை, ராணிப்பேட்டை வழியாக சென்னை செல்ல போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால் போலீசார் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ள வழியாக கனக வாகனங்கள் இருந்தால் சுமார் 150 கிலோ மீட்டர்தூரம்சுற்றி செல்ல வேண்டிய நிலை உள்ளது இதனால் கனரகவாகன ஓட்டிகள் மடப்பட்டு பகுதியிலேயே சாலையின் ஓரமாக நிறுத்தி உள்ளனர் இதனால் சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வாகனங்கள் சாலையோரம் அணிவகுத்து நிற்கிறது.



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையத்தில் உணவு பாதுகாப்புத்துறைஅதிகாரிகள்திடீர்சோதனைநடத்தினர். இதில்கலப்படம்செய்யப்பட்ட தேயிலை பறிமுதல் செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட கடைகளுக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



தமிழக வெற்றி கழகத்திற்கு இந்திய தேர்தல் ஆணையம் விசில் சின்னம் ஒதுக்கி உள்ளது அதை வரவேற்கும் வகையில் கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றி கழகத்தின் இளைஞரணி மாவட்ட செயலாளர் மோகன்தலைமையில்நகரசெயலாளர்விஜய்செல்வா,கார்த்திக்ஆகியோர்முன்னிலையில் தமிழகவெற்றிகழகத்தினர்பொதுமக்களுக்குவிசில்வழங்கிவிசில்அடித்துகொண்டாடினர் மேலும் பேருந்து நிலையத்தில் உள்ள ராஜீவ் காந்தி சிலைக்கு தமிழக வெற்றி கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு அரசே! காவல் துறையே!!

விடுதலை செய் ! விடுதலை செய் !!

கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு கூலி உயர்வு கேட்டு போராடியதற்காக பொய் வழக்குப் புனைந்து கைது செய்யப்பட்டுள்ள

தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் நிறுவனர் ஈசன் முருகசாமி உள்ளிட்ட விவசாயிகளை எவ்வித நிபந்தனையுமன்றி உடனடியாக விடுதலை செய்.

கறிக்கோழி வளர்ப்புக்கு கூலி உயர்த்தி கேட்டு மாதக்கணக்கில் போராடி வரும் கறிக்கோழி பண்ணையாளர்களின் நியாயமான கோரிக்கையை வர்த்தக ரீதியிலான ஒப்பந்த முறையை காரணம் காட்டி ஏமாற்றாதே!

பெரு முதலாளிகளிடம் நியாயமான கூலி உயர்வு கேட்டு போராடி வரும் கறிக்கோழி பண்ணையாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற தமிழ்நாடு அரசே உடனடியாக நடவடிக்கை எடு.

தமிழ் தேசியக் கட்சி

திருப்பூர், கோவை மாவட்டம் – 9443300730

கறிக்கோழி வளர்ப்பு பண்ணையாளர்கள் கூலி உயர்வு கோரி போராடுயதற்காக பொய் வழக்கிட்டு கைது செய்யப்பட்டுள்ள தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் நிறுவனர் ஈசன் முருகசாமி உள்ளிட்ட விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்.கறிக்கோழி பண்ணையாளர்களின் நியாமான கூலி உயர்வு கோரிக்கையை பெரு முதலாளிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக நிறைவேற்று...

*தமிழ் தேசியக் கட்சி

## தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு
# கலெக்டர் கந்தசாமி தலைமையில் வாக்காளர் உறுதி மொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்



25.01.2026 அன்று தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்லைவர் ச.கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று (23.01.2026) வாக்காளர் உறுதி மொழியினை அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

வாக்காளர் உறுதி மொழியான,

"மக்களாட்சியின் மீது பற்றுடைய இந்தியக் குடிமக்களாகிய நாம், நம்முடைய நலன் கரும் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலை-நிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், சாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம்."

என்ற உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பின் தொடர்ந்து வாசித்து உறுதி மொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் தேன்மொழி (பொது). ரமேஷ் கிருஷ்ணன் (வளர்ச்சி), வட்டாட்சியர் (தேர்தல்) சங்கர் கணேஷ் உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் (23.01.2026) மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்ற விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்

# தேனியில் சிஸ்கேர் டெக்னாலஜின் சிபி பிளஸ் சிசிடிவி கேமரா ஷோரும் திறப்புவிழா



தேனிமாவட்டம்தேனி என்ஆர்டி மெயின் ரோட்டில் சிஸ்கேர் டெக்னாலஜியின் சிபி பிளஸ் சிசிடிவி கேமரா ஷோரும் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இத்திறப்பு விழாவை தேனிமேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை கல்வி நிறுவனங்களின் பொதுச்செயலாளர் எம்எம்.ஆனந்தவேல், பொருளாளர்ராமசந்திரன், ரோட்டரிசங்க கவர்னர் கார்த்திக், தேனிப்பைப்ளைவுட்ஸ் நிர்வாக இயக்குநர் ராஜசேகர் ஈடன் கார்டன் நிறுவனர் கென்னடி,தேனிபுரபொஷனல் கொரியர் சௌந்திரபாண்டியன் முன்னிலை வகித்து நிறுவனத்தை திறந்து வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாகதேனி பிஸினஸ் போரத்தின் இயக்குநர். நிறுவனர் முத்துசெந்தில்குமார், தேனி செடாய் சங்கத்தின் மண்டல இயக்குநர் சுதந்திரராஜன், அரிமா சங்கத்தின் சரவணகுமார்,ஜேசியதேனிகிரின் சிட்டி சதிஸ்சுந்தரம்,பார்வதி சந்திரசேகர்,சண்முகபாண்டி. ஜெயபாண்டி,தினேஷ் கலந்து கொண்டனர், சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுவழங்கி கௌரவித்தார் நிறுவனத்தின் உரிமையாளர் ஸ்ரீஷயாம் சுந்தர். இவ்விழாவில் நியூபம்ஸ் நாராயணபாபு. சின்னமனூார் வர்த்தகசங்க தலைவர் உதயகுமார்,தேனி மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் செல்வகுமார், தேனிமாவட்ட வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் செல்வகுமார், டாக்டர் கணேசன், டாக்டர் ஆனந்தி,இராமநாதன், ரோட்டரி சங்கத்தின் மகேஷ் ராஜா.அழகர்ராஜா, பாலாஜி, பர்வின் சிங்.பழனிவேல்ராஜன், அரவிந்த்குமார். கர்ணன், செல்வகுமார். ராஜேஷ்,ஆதேஸ்நந்தன், பிரவின்ஜெய்குமார், பாலபிரகாஸ் மற்றும் தேனி மாவட்டத்தை சேர்ந்த பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# ஊத்தங்கரையில் 33 ஏரி பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூர் ஏரி கிழக்கு புற கால்வாயில் இருந்து 33 ஏரிகளுக்கு பாசன கால்வாய் அமைக்கும் பணியை விரைந்து செயல்படுத்தக் கோரி ஊத்தங்கரையில் பொதுப்பணித்துறை நீர்ப்பாசனபிரிவு உதவி செயற்பொறியாளர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.சங்க தலைவர் உமாபதி தலைமை தாங்கினார். செயலாளர் வழக்கறிஞர் மூர்த்தி பொருளாளர் காளியண்ணன் துணை தலைவர் கிருஷ்ணகுமார் துணை செயலாளர் வெங்கடேசன் உள்ளிட்ட பலரும் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் பாரூர் ஏரி கிழக்கு புற பாசன கால்வாய் மூலமாக 1341 ஏக்கர் பாசனப்பரப்பு பயனடைகிறது. ரெட்டிபட்டி ஏரி செங்கழுநீர்பட்டி ஏரி சின்ன கொட்ட குளம் ஏரி கொட்டகுளம் ஏரி பரசனேரி உள்ளிட்ட 33ஏரிகள் பயன் பெறுகிறது.

பாரூர்ஏரிகிழக்கு புற கால்வாயில் இருந்து 33 ஏரிகளுக்கு பாசன கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு 2022-ம் ஆண்டு 84.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பாரூர் ஏரி கிழக்கு புற கால்வாயில் இருந்து 33 ஏரிகளுக்கு பாசன கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு 2022-ம் ஆண்டு 84.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஆனால் இதுநாள் வரை 50% அளவிற்கு மட்டுமே கால்வாய் அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. மீதமுள்ள பணியை விரைந்து முடிக்கக் கோரியும்,33ஏரிபாசன பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தென்பெண்ணை ஆற்றின் மழைகாலங்களில் கடலில் வீணாக கலக்கும் உபரி நீரை விவசாயத்திற்கு பயன்பெறும் வகையில் கால்வாய் அமைக்கும் பணியை போர்க்கால அடிப்படையில் முடித்திடக் கோரியும் 33 ஏரி பாசன விவசாயிகள் சங்கம் சார்பாக கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

## கனிமொழி எம்.பி. பிறந்தநாளை முன்னிட்டு
# ஆவுடையானூர் ஊராட்சி பொடியனூரில் மாற்றுத்திறனாளிக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கப்பட்டது



தென்காசி சட்டமன்ற தொகுதி ஆவுடையானூர்ஊராட்சி பொடியனூரில் மாற்றுத்திறனாளியான சீனிவாசன் அவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது நிகழ்ச்சிக்கு தங்கப்பழம் அவர்கள் தலைமை தாங்கினார்கள் முன்னாள் ஒன்றியகவுன்சிலர் நாராயணசாமி மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் சொட்டு சுப்பிரமணியன் மாவட்ட பிரதிநிதி வளர்மதி ராஜன் மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் கிளைக் கழகச் செயலாளர் சிவன் பாண்டியன் வரவேற்று பேசினார்

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் மாவட்ட திமுக செயலாளர்சிவபத்மநாதன்அவர்கள் மூன்று சக்கர சைக்கிளை வழங்கினார்

நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி அன்பழகன், லட்சுமணன், கனி ராஜா துரை பாண்டியன், வி எஸ் பாண்டியன், திரிசூலம், அமல்ராஜ், ஐயங்கண்ணு குணபாலன் ,ஜெயபால் ,வேல், முருகேசன் .நாராயணசாமி, பால்பாண்டி வீரச்செல்வன், வைத்தியலிங்கம்கருப்பசாமி,கருப்பன், மாரியப்பன், சுபாஷ், ரஞ்சித், கே எஸ் மணியன், பூபதி,உள்ளிட்ட கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர் சீனிவாசன் அவர்களுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கழகத் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் பிறந்தநாளின் போது பாவூர்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினோம் அந்த விழாவில் இவருக்கும் ஒரு சக்கர வாகனம் வழங்கினோம்... தற்போது கடந்த வாரம் அது பழுதடைந்து விட்டது அறிந்து இன்று புதிய மூன்று சக்கர சைக்கிளை அவருக்கு வழங்கி சிறப்பித்தோம் கழக மூத்த நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்தும் மகிழ்ந்தோம் இறுதியில் பாண்டியன் அவர்கள் நன்றி கூறினார்

# சென்னிமலை காவல் நிலைய சரகத்தில் வழிப்பறி செய்த குற்றவாளிகள் மாவட்ட காவல் துறையினரால் கைது



ஈரோடு மாவட்டம், சென்னிமலை காவல் நிலைய சரகத்தில்கடந்த 19.01.2026 ம் தேதி சென்னிமலை டெக்ஸ்டைல் கம்பெனியில் வேலை செய்யும் M.D.முகமது பெரோஜ், த/பெ.முகமது நிசாம், பீகார் என்பவர் வேலைக்கு செல்லவேண்டி சிப்காட் அருகில் சென்று கொண்டிருந்தபோது அவரிடமிருந்த செல்போனை பறித்து கொண்டு ஒடிவிட்டதாக கொடுத்த புகாரின் பேரில், வழக்கு பதிவு செய்து எதிரிகளை தேடி வந்த நிலையில்,

1.பிரகாஷ்(23),த/பெ.விநாயகன்,36,காங்கேயம் ரோடு, ஊத்துக்குளி RS, திருப்பூர்.

2.வெற்றிவேல்(23),த/பெ.ஜெகநாதன்,47, கோவில்பாளையம், தளவைபாளையம், ஊத்துக்குளி, திருப்பூர்.


3. தரணிதரன்(18), த/பெ.சுப்ரமணி, வண்டிபேட்டை, ஊத்துக்குளி RS, திருப்பூர்.

4. அருண்குமார்(22), த/பெ.துரைசாமி, 159A, ஊத்துக்குளி RS, திருப்பூர்.

ஆகிய 4 எதிரிகளை கைது செய்து நிலையம் அழைத்து வந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடமிருந்து வாதியின் Redmi செல்போன் மீட்கப்பட்டு,மேற்படி எதிரிகளிடமிருந்த வழிப்பறிக்கு பயன்படுத்திய 2 இருசக்கர வாகனங்களான TN 42 C 1710, TN 39 DV 6383 Splendor Plus வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கில் விரைவாக செயல்பட்டு, எதிரிகளை கைது செய்தனர்

## கவுந்தப்பாடி காவல் நிலைய சரகத்தில்
# மூதாட்டியிடமிருந்து நகையை பறித்து கொலை மிரட்டல் விடுத்தவர் கைது
## ஈரோடு மாவட்ட காவல் துறையினரால் நடவடிக்கை

ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி காவல் நிலைய சரகத்தில் கடந்த 22.01.2026 ம் தேதி கவுந்தப்பாடி, சிவன் ரைஸ் மில் அருகில் வசிக்கும் (லேட்)



அண்ணாமலையின் மனைவி மல்லிகா(69) என்பவருக்கு சொந்தமான வீட்டில் 10 நாட்களுக்கு முன் புதிதாக வாடகைக்கு குடிவந்த மௌலீஷ்வரன்(23), த/பெ.கிருஷ்ணன், கவுந்தப்பாடி என்பவர் மல்லிகாவை தனது வீட்டில் சரியான முறையில் கரண்ட் வருவதில்லை என்றும், உள்ளே வந்து பாருங்கள் என்று கூறியதால், வீட்டிற்குள் சென்றமல்லிகாவைகீழேதள்ளிஅவர்அணிந்திருந்த 1 ¼ பவுன் தங்க சங்கிலியை பறித்து கொண்டு, வெளியில் சொன்னால் கொன்று விடுவேன் என்று மிரட்டி அங்கிருந்து தப்பி சென்றதாக கொடுத்த புகாரின் பேரில், கவுந்தப்பாடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொண்ட கவுந்தப்பாடி போலீசார் மேற்படி எதிரி மௌலீஷ்வரனை பிடித்து விசாரித்த போது தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் கைது செய்து, மேலும் கொள்ளையடித்த நகையை கவுந்தப்பாடியில் உள்ள நகை அடமானம் வைக்கும் கடையில்விற்றுவிட்டதாககூறியதன்பேரில்,நகையை பறிமுதல் செய்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது என்பதை மாவட்ட காவல்துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## கோவை சரவணம்பட்டி வாகராயம்பாளையம் பகுதியில் உள்ள ஸ்ரீ சௌடேஸ்வரி மண்டபத்தில், சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய அரசு ஜவுளி அமைச்சகம் சார்பாக
# நெசவாளர்களுக்கான நெசவாளர் அடையாள அட்டை என்றழைக்கப்படும் "பேச்சான் கார்டு" வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை சரவணம்பட்டி வாகராயம்பாளையம் பகுதியில் உள்ள, ஸ்ரீ சௌடேஸ்வரி மண்டபத்தில்,கோவை ராமநாதபுரம் பகுதியில் செயல்பட்டு வருகின்ற, சில்க் வில்லேஜ் கைத்தறி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இந்திய அரசு ஜவுளி அமைச்சகம், நெசவாளர் சேவை மையம்-சேலம் சார்பில் இணைந்து நடத்திய, நெசவாளர்களுக்கான நெசவாளர் அடையாள அட்டை என்றழைக்கப்படும்"பேச்சான் கார்டு" வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சேலம் மத்திய அரசு நெசவாளர் சேவை மையம் இனை இயக்குனர் கார்த்திகேயன் நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கினார். இதில், சில்க் வில்லேஜ் கைத்தறி நிறுவன தலைவர் கைத்தறி முருகேசன், பழனிவேல், ராஜாராம்,மோப்பிரியபாளையம் பஞ்சாயத்து தலைவர் சசிகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். சுமார் 300-க்கும் மேற்பட்டோர் நெசவாளர்களுக்கு அங்கீகார அட்டை வழங்கப்பட்டது.

விழாவின் ஒரு பகுதியாக நெசவாளர் அடையாள அட்டை குறித்து சில்க் வில்லேஜ் கைத்தறி நிறுவன தலைவர் கைத்தறி முருகேசன் கூறியதாவது..

நெசவாளர் அடையாள அட்டை என்பது, தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் தறி நெசவுத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்காக அரசால் வழங்கபடும், ஒரு முக்கிய ஆவணமாகும், இது மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு நலத்திட்டங்கள், மானியங்கள், மற்றும் கடனுதவிகளைப் பெறுவதற்கு உதவுகிறது, மேலும் நெசவாளர்களுக்கான அரசாங்க நலத்திட்டங்கள் மற்றும் பாதுகாப்புப் பலன்களை அணுகுவதற்கும் இந்த அட்டை அவசியம் என்றார்.

மேலும், நெசவாளர் அடையாள அட்டையின் முக்கியத்துவமாக

அரசு நலத்திட்டங்கள்,



வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நெசவாளர்களுக்கான வீடு வசதி, சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற பலன்களைப் பெற உதவுகிறதாகவும் கூறினார். முத்ரா போன்ற கடன் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கவும், வங்கிக் கடன்கள் பெறவும் இந்த அட்டை பயன்படுகிறது.

மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சகத்தால்வழங்கப்படும்தேசிய அடையாள அட்டையாகவும் இதனை பயன்படுத்தலாம் எனவும், இது நெசவாளர்களைப் பதிவு செய்வதற்கும், அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதற்கும் உதவுகிறது என எடுத்துரைத்தார்

DHINATH DHALAM Morning Tamil Daily 24.01.2026



சென்னை ஆவடி காவல் இணை ஆணையர் டாக்டர். வடுகம் ஆர்.சிவக்குமார் ஐ.பி.எஸ்., அவர்களை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர் சி.எம்.ராஜேந்திரன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.



ஈரோட்டில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநில பொருளாளர் கே.கே.சி.பாலு அவர்களை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பெருந்துறை சட்டமன்றத் தொகுதி மாவட்டச் செயலாளர் வி.விஜயபாலன் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது அவருக்குச் சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். கூட்டணிக் கட்சிகளின் உறவை வலுப்படுத்தும் விதமாக அமைந்த இந்தச் சந்திப்பில் முக்கிய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில்

# மாவட்ட காவல் கண்காணிப்பாளர் DYNAMIC BEAT என்ற திட்டத்தை துவக்கி வைத்தார்



ஈரோடு மாவட்ட காவல்துறை சார்பில் மாவட்டம் முழுவதும் நடைபெறும் குற்றச்சம்பவங்கள் மற்றும் இதர சட்ட விரோத செயல்களை தடுக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, பிரச்சனைகள் நடக்கும் இடத்திற்கு துரிதமாக சென்று தீர்க்கும் பொருட்டு ஏற்கனவே 35 சட்ட ஒழுங்கு காவல் நிலையங்களில் "DEDICATED BEAT" என்ற பெயரில் துவங்கப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. அதேபோல் காவல் துறை தலைவர், மேற்கு மண்டலம், கோவை அவர்கள் மற்றும் காவல்துறை துணைத்தலைவர், கோவை சரகம் அவர்களின் உத்தரவின் பேரில் தற்போது "DYNAMIC BEAT" என்ற பெயரில் 24 மணி நேரமும் காவலர் ரோந்து என்ற திட்டத்தை நேற்று 23.01.2026 ம் தேதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் A.சுஜாதா ஈரோடு மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில் வைத்து துவக்கி வைத்தார். மேற்படி Dynamic Beat ஆனது, தற்போது மாவட்டத்தில் 13 காவல் நிலையங்களில் முதற்கட்டமாக ஈரோடு நகரம், ஈரோடு தெற்கு, ஈரோடு வடக்கு, கருங்கல்பாளையம், ஈரோடு தாலுக்கா, பவானி, அந்தியூர், சித்தோடு, கோபி, சத்தி, பங்களாப்புதூர், புளியம்பட்டி, பெருந்துறை ஆகிய சரகங்களில் இருசக்கர வாகனங்களின் மூலம் 13 காவலர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் நியமித்து, இருசக்கர ரோந்து வாகனங்கத்தில் சைரன், ஒளிரும் விளக்குகளுடன், MDT Device, Walkie Talkie, Reflect Jacket, Baton Light ஆகியவை காவல் ஆளினர்களுக்கு கொடுக்கப்பட்டது. எனவே பொதுமக்கள் வரும் காலங்களில் ஏதேனும் பிரச்சனை சம்மந்தமாக காவல் கட்டுப்பாட்டு அறை எண்ணான "100" அழைக்கும் போது மேற்படி சம்மந்தப்பட்ட ரோந்து காவலர்களிடமிருக்கும் MDT DEVICE (MOBILE DATA TERMINAL) மூலம் தகவல் பெறப்பட்டு, உதவி தேவைப்படும் இடத்திற்கு மேற்படி ரோந்து காவலர்கள் காலதாமதமின்றி சென்று பிரச்சனைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாவட்ட காவல் துறை சார்பில் தெரிவித்துக்கொள்ளபடுகிறது.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை காவல் நிலையத்தின் சார்பில் நாடக கலைஞர்களை வைத்து முக்கிய வீதிகளாக கல்லாவி சாலை ரவுண்டானா நான்கு ரோடு எல்ஜசி அலுவலகம் வழியாக முக்கிய வீதிகளில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது இந்த பேரணியில் எமதர்மர் சித்திரகுப்தர் வேடம் அணிந்த நிலையில் சாலையில் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு குறித்து நாடக அரங்கேற்றி விழிப்புணர்வு நடைபெற்றதுஇந்தப்பேரணியைஊத்தங்கரைகாவல்ஆய்வாளர்முருகன்கொடியசைத்து துவக்கி வைத்தார் உடன் காவல் உதவி ஆய்வாளர் மோகன் காவலர்கள் ஊத்தங்கரை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்

# ஈரோடு சத்தியமங்கலத்தில் சாலை பாதுகாப்பு வார விழிப்புணர்வு பேரணியை டிஎஸ்பி தொடங்கி வைத்தார்



ஈரோட்டில் சாலை பாதுகாப்பு வார விழாவை முன்னிட்டு சத்தியமங்கலத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.தமிழ்நாடு காவல்துறை, வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் முத்தூஸ் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இந்த நிகழ்ச்சியை சத்தியமங்கலம் நகராட்சி தலைவர் ஜானகி ராமசாமி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணியானது மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் தொடங்கி, ரங்கசமுத்திரம் வழியாகச் சென்று முத்தூஸ் மருத்துவமனையில் நிறைவடைந்தது. பேரணியில் பங்கேற்றசெவிலியர்கள் மற்றும் தன்னார்வலர்கள், வாகனங்களை ஓட்டும்போது சீட் பெல்ட் மற்றும் தலைக்கவசம் அணிவதன் அவசியம் குறித்தும், சாலைவிதிகளை முறையாகப் பின்பற்றுவது குறித்தும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

இந்நிகழ்வில் காவல் துணை கண்காணிப்பாளர் முத்தரசு, கோபி வட்டார போக்குவரத்து அலுவலர்கள் ஷேக் முகமது மற்றும் ரவிக்குமார், இந்திய மருத்துவர் சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும், வெற்றி நர்ஸிங் பயிற்சி மையத்தின் நிர்வாக இயக்குனர் கே.எஸ். ஸ்ரீதர், சத்தியமங்கலம் மக்கள் நல கூட்டமைப்பு தலைவர் ஆனைக்கொம்பு ஸ்ரீராம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களும், காவல்துறைமற்றும்போக்குவரத்து துறை அலுவலர்களும் இதில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## தூமனூர் சேம்புக்கரை மலை கிராமத்திற்கு இடையே

# புதிய சாலைப் பணிகள் MP கணபதி ராஜ்குமார் பூமிபூஜை செய்து தொடக்கம்

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நம்பர் 24 வீரபாண்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆனைகட்டி தூமனூர் சேம்புக்கரை மலை கிராமத்திற்கு இடையே ரூபாய் 3 கோடியே 36 லட்சம் மதிப்பில் புதிய சாலை அமைக்கும் பணிகளை கோவைபாராளுமன்றஉறுப்பினர்கணபதிராஜ்குமார் பூமிபூஜை செய்து தொடங்கிவைத்தார்.

கோவை மாவட்டம், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், நம்பர் 24 வீரபாண்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆனைகட்டி மலைப்பகுதியில் தூமனூர் மற்றும் சேம்புக்கரை மலை கிராமங்கள் உள்ளது. இக்கிராமங்களில் சுமார் 150 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில் சேம்புக்கரையில் இருந்து தூமனூர் கிராமத்திற்கு செல்ல முறையான சாலை வசதி இதுவரை இல்லாமல் இருந்தது. இதையடுத்து அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று கோவை



பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் இருந்து ரூபாய் 3 கோடியே 36 லட்சம் ஒதுக்கிடு செய்யப்பட்டு சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன.

இப்பணிகளை கோவை பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கலந்து கொண்டு பூமிபூஜை செய்து தொடங்கிவைத்தார். தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு முன்னாள் கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் வி சி ஆறுக்குட்டி, மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து சேம்புக்கரை கிராமத்தில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தை பார்வையிட்டார். மேலும் மலை வாழ் மக்களிடம் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

அப்போது பாராளுமன்ற உறுப்பினரிடம் சாலை வசதி, பேருந்து வசதி, விவசாயத்திற்கு தேவையான மின் இணைப்பு மற்றும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். அவற்றை கேட்ட எம் பி கணபதி ராஜ்குமார் அவர்களின் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து தூமனூர் பகுதியில் செயல்பட்டு வரும் அரசுப் பள்ளியில் பணியாற்றி வரும் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களை அழைத்து சாலை வசதிகள் கூட இல்லாத மலை கிராமத்தில் வந்து பணிபுரிவதற்காக தனது பாராட்டுக்களை தெரிவித்தார். மேலும் தலைமை ஆசிரியரின் கோரிக்கையை ஏற்று பள்ளியில் உள்ள சுமார்ட் வகுப்பிற்கு தேவையான இணைய வசதிக்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதாகவும் உறுதியளித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, ஒன்றியச் செயலாளர் சி எம் குமார், ஆனைகட்டி மதன், முன்னாள் வீரபாண்டி ஊராட்சி தலைவர் பழனி, நஞ்சுண்டாபுரம் முன்னாள் ஊராட்சி துணைத் தலைவர் திருநாவுக்கரசு, பி டி ஓ பாலகிருஷ்ணன், ஊராட்சி செயலர் பிரகாஷ், முன்னாள் துணைத் தலைவர்செல்வராஜ்,ஏவிஎஸ்செல்வராஜ்மருதமணி, உத்தமன், விஜயகுமார், ரவி, ரங்கராஜ், பெருமாள், ரங்கசாமி, ஒப்பந்ததாரர் சசிக்குமார் உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நஞ்சுண்டாபுரம் ஊராட்சி திருவள்ளுவர் நகரில் ரூ.12,39,000 மதிப்பில் சாலை அமைக்கும் பணிகளை MP கணபதி ராஜ்குமார் பூமிபூஜை செய்து தொடங்கி வைத்தார்

## ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில்

# பணியாளர்கள் புத்துணர்ச்சி பெற டென்னிஸ் ஆடுகளத்தை மேயர் நாகரத்தினம் திறந்து வைத்தார்



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் உடல் நலனைப் பேணவும், பணிச்சுமையால் ஏற்படும் மன அழுத்தத்தைக் குறைத்து அவர்களை எப்போதும் புத்துணர்ச்சியுடன் வைத்திருக்கவும் மாநகராட்சி நிர்வாகம் சார்பில் ஒரு சிறப்பான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாநகராட்சி வளாகத்திலேயே பிரத்யேகமான டென்னிஸ் விளையாட்டு ஆடுகளம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த புதிய ஆடுகளத்தின் திறப்பு விழா நடைபெற்ற நிலையில், ஈரோடு மாநகராட்சி மேயர் அவர்கள் நேரில் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி மைதானத்தை திறந்து வைத்தார்.

மாநகராட்சி ஆணையாளர் டென்னிஸ் மட்டையைப்பிடித்து முதல் ஆட்டத்தை ஆடி விளையாட்டைத் தொடங்கி வைத்தார்.

அரசுப் பணியில் இருக்கும் அலுவலர்கள் காலை முதல் மாலை வரை பல்வேறு மக்கள் நலப் பணிகளிலும், கோப்புப் பராமரிப்புப் பணிகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய சூழலில் ஏற்படும் உடல் மற்றும் மனச்சோர்வை நீக்கும் வகையில், அதிகாலை வேளையில் பணிக்கு வரும் முன்பும், மாலை பணி முடிந்து வீடு திரும்பும் முன்பும் பணியாளர்கள் இங்கு விளையாடி மகிழலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த டென்னிஸ் ஆடுகளம் பணியாளர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதுடன், அவர்களுக்குள் ஒரு நல்லுறவையும் குழு உணர்வையும் உருவாக்கும் என அதிகாரிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். மாநகராட்சி நிர்வாகத்தின் இந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைக்குப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.

# தேசிய வாக்காளர் தினம்: ஈரோடு மாநகராட்சியில் ஆணையாளர் அர்பித் ஜெயின் தலைமையில் உறுதிமொழி ஏற்பு

16-வது தேசிய வாக்காளர் தினத்தை (2026) முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் வாக்காளர் விழிப்புணர்வு மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாநகராட்சி ஆணையாளர் அர்ப்பித் ஜெயின் ஐஏஎஸ்., தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனநாயகக் கடமையை வலியுறுத்தும் வகையில் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்திய தேர்தல் ஆணையம் வாக்காளர் சேவைகளை எளிதாக்கும் வகையில் பல்வேறு வசதிகளைச் செய்துள்ளது.

"எனது வாக்கு, எனது வலிமை" என்பதை முன்னிறுத்தி, புதிய வாக்காளர்களைச் சேர்க்கப் படிவம் 6, வெளிநாடு வாழ் வாக்காளர்களுக்குப் படிவம் 6A, பெயர் நீக்கத்திற்குப் படிவம் 7 மற்றும் முகவரி மாற்றம் அல்லது திருத்தங்களுக்குப் படிவம் 8 ஆகியவற்றை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்தச் சேவைகளை https://voters.eci.gov.in என்ற இணையதளம் வழியாகவோ அல்லது 'Voters Service Portal' செயலி மூலமாகவோ ஆன்லைனில் எளிதாக மேற்கொள்ள முடியும்.



மேலும், வாக்காளர்கள் தங்கள் பகுதி வாக்குச்சாவடி நிலை அலுவலரை (BLO) தொடர்பு கொள்ளவும், சந்தேகங்களுக்கு 1950 என்ற உதவி எண்ணை அழைக்கவும் தேர்தல் ஆணையம் வழிவகை செய்துள்ளது.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.